Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 46/2025**

**Deposition of PW.2 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகம்மாள் | ஜாதி | : | |
| க/பெ | : | முருகேசன் | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | பெருமாள்கோவில்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 57 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.01.2026.

(எதிரி ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் பெருமாள்கோவில்பட்டியில் குடியிருந்துகொண்டு கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 தேவராஜ் எனது அண்ணன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிக்கும், அ.சா.1 எனது அண்ணன் தேவராசும் பக்கத்து பக்கத்து வீட்டுக்காரர்கள். அவர்கள் இரண்டு வீட்டிற்கு நடுவில் உள்ள சந்தில் மண் அடிப்படு சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 22.09.2024 ஆம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் அ.சா.1 தேவராஜ் வீட்டிற்கு அவரை பார்ப்பதற்காக சென்றபோது, எனது அண்ணன் சந்திற்கும், ஆஜர் எதிரி சந்திற்கும் நடுவே அ.சா.1ம், ஆஜர் எதிரியும் சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது ஆஜர் எதிரி அந்த சந்தில் அவருக்கு தான் இடம் இருக்கிறது என்று சொன்னார். அதற்கு எனது அண்ணன் தேவராஜ் உனக்கு இடம் சொந்தமானதா இருந்தால் அளந்து எடுத்துக்கொள் என்று சொன்னார். அப்போது ஆஜர் எதிரி மண்வெட்டி பிடியால் எனது அண்ணன் தலையில் அடித்து, காயத்தை ஏற்படுத்தியதில் அவருக்கு தலையில் ரத்தம் வந்தது. அதை பார்த்த நானும் எனது அண்ணன் மகன் மனோகரனும் காயமுற்ற எனது அண்ணன் தேவராஜை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையில் சேர்த்தோம். சண்டை நடந்த இடத்தில் ஆஜர் எதிரி எனது அண்ணன் தேவராஜை பார்த்து எப்போது இருந்தாலும் கொல்லாமல் விடமாட்டேன் என்று சத்தம் போட்டார். நான் மருத்துவமனையில் இருக்கும்போது சின்னாளபட்டி காவல்நிலையத்தில் இருந்து வந்து விசாரித்து புகார் பெற்றார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 தேவராஜ் உங்கள் அண்ணன் என்றால் சரிதான். போலிசார் இந்த வழக்கு சம்மந்தமாக என்று விசாரித்தார்கள் என்றால் 22.09.2024 அன்று விசாரித்தார்கள். எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் மேற்சொன்ன தேதியில் மட்டும் தான் விசாரித்தார்கள். நீங்கள் போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் முதல் விசாரணையில் கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரிக்கும், உங்கள் அண்ணன் வீட்டிற்கும் இடையே சந்து பிரச்சனை உள்ளது என்றால் உள்ளது. அ.சா.1 ன் இடத்திற்கு கிழக்கு பக்கத்தில் உள்ள காலியிடத்தில் அ.சா.1 ஆடு, மாடு கட்டி வைத்துள்ளார் என்றும், அதன் கழிவுகள் அந்த காலியிடத்தில் இருக்கும் என்றால் சரிதான். எதிரி உங்கள் அண்ணனை அடிக்கவில்லை என்றும், அங்கு தேங்கியிருந்த கழிவுநீரில் வழிக்கி விழுந்து உங்கள் அண்ணனுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவத்தை கேள்விபட்டு தான் நீங்கள் வந்தீர்கள் என்றால் சரியல்ல, நான் என் அண்ணன் வீட்டில் தான் இருந்தேன். என் அண்ணனை அடிக்கும்போது நான் ஜன்னல் வழியாக பார்த்துவிட்டு தான் வந்தேன். அ.சா.1 உங்கள் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சி 3 மனோகரன் உங்கள் அண்ணன் மகன் என்றால் சரிதான். சம்பவத்தன்று மருத்துவமனைக்கு யார் யார் சென்றார்கள், எதில் சென்றார்கள் என்றால் ஆட்டோவை கூப்பிட்டோம் வரவில்லை. ரோட்டிற்கு சென்று அவர்கள் ஆட்டோவில் மருத்துவமனைக்கு சென்றார்கள். நான் இருசக்கர வாகனத்தில் பின்னால் சென்றேன். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அ.சா.1 உங்கள் அண்ணன் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. அரசு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் மாலை சென்றோம்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrat
Athoor